# 5 ஒளியியல்

மதிப்பீடு:

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. வெளிப்புறமாக எதிரொளிக்கும் பரப்பை உடைய வளைவு ஆடி

(அ) குவி ஆடி (ஆ) குழி ஆடி (இ) சமதள ஆடி

2. வாகனங்களில் பின்புறக் காட்சி ஆடியாகப் பயன்படுத்தப்படும் ஆடி

(அ) குழி ஆடி (ஆ) குவி ஆடி (இ) சமதள ஆடி

3. சூரிய சமையற்கலனில் பயன்படுத்தப்படும் ஆடி

(அ) குவி ஆடி (ஆ) குழி ஆடி (இ) சமதள ஆடி

4. பொருளை _______________ல் வைக்கும்போது பொருளின் அளவேயான பிம்பத்தின் அளவு தெரியும்.

(அ) C (ஆ) F (இ) ஈறிலாத் தொலைவு

5. சாலைகளின் மிகவும் குறுகிய மற்றும் நுட்பமான வளைவுகளில் பயன்படுத்தப்படும் ஆடிகள்

(அ) சமதள ஆடிகள் (ஆ) குவி ஆடிகள் (இ) குழி ஆடிகள்

6. கலைடாஸ்கோப் ___________ தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகிறது.

(அ) ஒழுங்கான எதிரொளிப்பு

(ஆ) ஒழுங்கற்ற எதிரொளிப்பு

(இ) பன்முக எதிரொளிப்பு

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. குவி ஆடிகளால் உருவாக்கப்படும் பிம்பம் எப்பொழுதும் பொருளை விட அளவில் ________________________
2. ஆடி மையத்திற்கும், முதன்மைக் குவியத்திற்கும் இடைப்பட்டத் தொலைவு ______ எனப்படும்.
3. குவி ஆடியில் தோன்றும் பிம்பத்தின் தன்மை ___________
4. இணையாக உள்ள இரண்டு சமதள ஆடிகளுக்கிடையே உள்ள பொருள் உருவாக்கும் பிம்பங்களின் எண்ணிக்கை _________
5. கண் மருத்துவர் கண்களைப் பரிசோதிக்கப் பயன்படுத்தும் ஆடி___________.

## III. சரியா? தவறா? கூறு.

1. குவியாடி உருவாக்கப்பட்ட கோளத்தின் மையம் ஆடி மையம் ஆகும். (சரி/தவறு)

ஆக்கம்: ப.லோகநாதன், பட்டதாரி ஆசிரியர், அ.உ.நி.ப கெட்டுஅள்ளி

LIVEWORKSHEETS